# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC.140/2022 | Date | : | 24.08.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா.7** | Taluk | : | |
| Name | : | **திரு.செல்வராசு** | Calling | : | |
| Father/Husband Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.08.2026.
**(எதிரி ஆஜர்)**

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திருமதி.செந்தாமரைசெல்வி, அவர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டதால், அவருடன் பணியாற்றிய வகையில் அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் அவருக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 16.07.2020 ஆம் தேதி, காவல் உதவி ஆய்வாளர் திருமதி.செந்தாமரைசெல்வி, அவர்கள் பணிபுரிந்தபோது, முன்னதாக சங்ககிரி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற முருகேசன் என்பவரின் அடிதடி காயத்கவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முருகேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் பேரில் சங்ககிரி

காவல் நிலைய குற்ற எண். 449/2020, சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதச- ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசலை, வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2) பின்னர், அன்றைய தினமே, பிற்பகல் சுமார் 01.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவயிட சாட்சிகள் ஜெயபால் மற்றும் சிவகுமார் ஆகியோர்கள் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர், சாட்சிகளான இராஜேந்திரன், லட்சுமணன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) பின்னர், அன்றைய தினமே, பிற்பகல் சுமார் 02.15 மணிக்கு சம்பவ இடம் சென்று, SK நகரில் உள்ள வாத்தியார் வீட்டின் முன்பு வைத்து வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட உருட்டு கட்டை ஒன்றை சாட்சிகள் ஜெயபால், சிவக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார்.

4) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்து தமிழரசன், என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 16-07-2020 ம் தேதி, இரவு சுமார் 10.00 மணிக்கு எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது

செய்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்தில் ஒப்புவித்துள்ளார்.

5) பின்னர், சங்ககிரி அரசு மருத்துவமனை சென்று சம்பவத்தில் காயமடைந்த முருகேசன், என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.சுரேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, முருகேசன் என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கையுடன் கூடிய காயச்சான்றிதழைப் பெற்றுள்ளார்.

6) பின்னர், கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம்-91ன் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **(படிவம்-91 அ.சா.ஆ-7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அத்துடன் இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதச-ஆகிய பிரிவுகளின் கீழ் கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை** :-

நான் சொன்னவாறு, சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், சம்பவ இடமே செல்லாமல் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிமீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Selvarasu

Judicial Magistrate No.1,

Sankari.